[27th August 1970

Travelling Allowance

*17. *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the peon attached to Drugs Inspector, Thanjavur, has drawn more travelling allowance than his officer who is gazetted ; and

(*b*) if so, the reason therefor ?

பயணப்படி

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூரில் உள்ள மருந்து இன்ஸ்பெக்டருடன் (Drugs Inspector) இணைக்கப்பட்ட ஏவலர் (கடைநிலை ஊழியர்) அரசிதழ்ப் பதிவு பெற்ற தனது அதிகாரியைக் காட்டிலும் அதிகப் பயணப்படி பெற்றுள்ளார் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம் ; (இ) மருந்துச் சரக்குகள் ஆய்வாளர் குறிப்பிட்ட மாதப் பயணப்படியாக ரூபாய் 75/- மட்டும் பெறும்போது, அவரது சேவகர் தமிழ்நாடு பயணப்படி விதிகளின்படி பயணப்படி பெறுவதே அதற்குக் காரணம்.

திரு. சா. கணேசன் : அவர்கள் பெற்ற தொகை எவ்வளவு ? மொத்தம் அந்த ஆண்டில் பெற்றதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் ரூ. 77—75, மார்ச் மாதம் ரூ. 81—87, நவம்பர் மாதம் 1968-ல் ரூ. 82—20 என்று இருக்கிறது. ஆக இந்தத் தொகை ரூ. 82-க்கும் 83-க்கும் இடையில் உள்ளது.

Loans borrowed by farmers

*18. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government will take the responsibility of repaying the loans borrowed by the farmers for deepening irrigation wells and digging new wells in drought-affected areas in Tamil Nadu, particularly in Srivilliputhur and Sathur taluks during the last few years and thereby give relief to them ?

விவசாயிகள் வாங்கிய கடன்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழகத்தில் வறட்சிப் பகுதிகளில் குறிப்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் சாத்தூர் தாலுக்காக்களில் கடந்த சில வருடங்களில், நீர்ப்பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளைத் தோண்டவும் விவசாயிகள் வாங்கிய கடன்களை தீர்க்க முடியாத அளவுக்கு அவர்கள் நலிந்து விட்ட காரணத்தால், அக்கடன்களை அரசு ஏற்றுக்கொண்டு முழு நிவாரணமளிக்குமா ?

THE HON. THIRU K.A. MATHIALAGAN : The Collectors of Ramanathapuram, Madurai and Tirunelveli have been authorised to adopt a go slow policy in the collection of dues to Government in the areas where they are personally satisfied that owing to failure of rains, acute drought conditions prevail. They will also be competent to recommend such concessions which are necessary to meet the situation and the Government will sympathetically consider them.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தென் ஜில்லாக்களின் அந்தப் பகுதிகளிலுள்ள கலெக்டர்களுக்குக் கூறியதைப்போல், தொடர்ந்து 4-வது வருடமாக அங்கெல்லாம் மழையில்லாத நிலைமை இருக்கிறது. 4 வருடமாகக் கிணறுகள் தோண்டி விவசாயம் செய்தும்கூட கொஞ்சமும் வருமானம் இல்லாமல் கடன் ஏறியதோடு கஷ்டப்படுகிறார்கள். கிணறு வெட்டக் கடன் வாங்கியதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு, வெட்டிய கிணறுகளிலும் தண்ணீர் இல்லாத நிலையில் விவசாயிகள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே அவர்களுக்குக் கொடுத்த கடன்களுக்கெல்லாம் முழு நிவாரணம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். விவசாயிகளின் நிலைமையைப் பற்றி அரசாங்கம் விசாரணை செய்து அதன் மீதாவது ஒரு முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். 4-50 p.m.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போலவே, இங்கே ''பைனான்சியல் ரெக்'' என்று ஆங்கிலத்தில் போட்டிருக்கிறார்கள். அதாவது அவர்கள் ''நொறுங்கி'' விட்டார்கள் என்றுதான் போட்டிருக்கிறார்கள். இருந்த போதிலும் இந்த அரசை நடத்துகிறவர்களும் 'பைனான்சியல் ரெக்'' ஆகாமல் இருப்பதற்குப் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த வறட்சிப் பிரதேசத்தில் 6 மாத காலங்களுக்கு வரி வசூலைத் தள்ளிப் போட வேண்டும் என்று 26—3—70 அன்று தேதியிட்ட ஆணைப்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. நிலவரி பாக்கியாகட்டும், கடன் வகைகள் ஆகட்டும், அங்கே வசூலிக்கப்பட வேண்டியதில்லை. அவைகளையெல்லாம் தள்ளி வைக்கலாம் என்ற அதிகாரம் கலெக்டர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. உறுப்பினர் சொல்லுகிற அளவுக்கு சிக்கல்கள் இருக்கின்றன. சிரமமான நிலையில் வசூலிக்கப்பட முடியாத நிலைமையில் இருக்கலாம். ஆனால் பொதுவாகக் கடன்களை எல்லாம் விட்டுவிட வேண்டும் என்று சொல்லுகிற யோசனையை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : துணைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட கடன்கள் வசூலிக்கப்படாமல் ஒரு கோடிக்கு மேலாக இருப்பது மாண்பு

[27th August 1970

மிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இம்மாதிரி ஒவ்வொரு முறையும் வசூலிக்க முற்படுகையில் இப்படிக் கஷ்டமான நிலைமை இருக்கிறது. இப்போது வசூலிப்பதை ஒத்தி வையுங்கள் என்று கேட்டு, அப்படி ஒத்தி வைத்துக் கொண்டே போவது என்பது நடந்து கொண்டு வருகிறது. எனவே இதற்கு சரியாக ஒரு முடிவு காணும் வகையில், ஒரு கமிட்டியையாவது ஏற்படுத்தி, அதற்குக் கலெக்டரையோ, ரெவின்யூ போர்டு மெம்பரையோ தலைவராகப் போட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னதைப்போல், பல வருட காலமாக வசூலிக்கப்படாது இருக்கிற கடன்களுக்கு ஒட்டு மொத்தமான நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பல வருடங்களாக வரிகள், கடன்கள் வசூலாகவில்லை என்பது உண்மை. அதைப்பற்றி இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கும் நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெட்டியார் அவர்கள் இப்போது எந்தக் கட்சி என்று எனக்குத் தெரியாது. அவர்கள் அப்போது சார்ந்திருந்த கட்சி ஆட்சியில் இருக்கும்போதே, வரி வசூல் செய்யப்படாமல் கோடிக் கணக்கான ரூபாய் பாக்கியிருந்தது என்பது அவருக்கும் தெரியும் என்றே கருது கிறேன். அங்கே உள்ளவர்களால் கொடுக்க முடியாது. அவ்வளவு சிரமம் என்பது மட்டுமல்ல. அன்றைக்கு இருந்த அரசாங்க நிர்வாகம், அமைப்பு எல்லாம் அதற்குச் சாதகமாக இருந்தது. ஆனால் அது ஒரு பொதுப் பிரச்னை. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பொதுவாக வறட்சி ஏற்படுகிறபோது, பயிர்கள் விளையாதபோது, வரி வசூலை ரத்து செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால் கொடுக்கிற கடனை எல்லாம் திருப்பிக் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை ஏற்பட்டால், அது எவ்வளவுதான் வளமான அரசாங்கமாக இருந்தாலும், அவர்களும் கடன்காரர்களாகத்தான் ஆகும் நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கிணறுகளை ஆழப்படுத்த, கிணறுகளை வெட்டக் கடன் பெற்று, அதனால் பயன் பெறாத வகையில் கற்பாறையாக இருந்து, வறண்ட நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், அப்படி வறட்சி கொண்ட கிணறுகளையாவது விசாரித்தறிந்து அந்த விவசாயிகளுக்கு மட்டுமாவது நிவாரணம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : பொதுவாக ஒத்தி வைக்கிற காரியங்களைத்தான் அரசாங்கம் கவனிக்கும். கிணறு என்பது ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு வகையான ஆழத்திற்குப் போகிறது. சில இடங்களில் தண்ணீர் வரும். சிலவற்றை நன்கு ஆழப்படுத்தினால் தண்ணீர் வரும். இப்படிப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்த வாங்கப்பட்ட கடன்கள் எல்லாம் அரசுக்குத் திரும்ப வரவேண்டுமே ஒழிய முழுவதும் நிவாரணமாக வேண்டும் என்பது சரியல்ல. பிறகு அதுவே ஒரு கொள்கையாகி விடும். இது வெறும் ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் பகுதியைப் பொறுத்த பிரச்னை மட்டுமல்ல. கோடிக் கணக்கான ரூபாய் சம்பந்தப் பட்ட கொள்கைப் பிரச்னை. ஆகவே அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

27th August 1970]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் அரசாங்கம் உதவி செய்ய முடியும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பல வருடங்களாக இந்தத் தொகை யெல்லாம் ஏட்டிலேயே இருக்கிறதே தவிர வசூலிக்கப்படவில்லை. எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, நான் சார்ந்திருக்கிற கட்சியைச் சார்ந்த சர்க்காரானாலும் சரி, பல வருடங்களாக இந்த வகையில் முயற்சி செய்து ஒவ்வொரு தடவையும் ஒத்திப் போடப்பட்டு — அது அரசியல் காரணங்களுக்காக இருந்தாலும் சரி, தனிப்பட்ட தயவு தாட்சண்யங் களுக்காக இருந்தாலும் சரி — வசூலாகாமல் இருந்துவிட்டது. கொள் கையளவில் விட்டுக் கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருந் தாலும்கூட, நடைமுறையில் இந்தத் தொகை இன்னமும் வசூலிக்கப் படாமலேயே இருந்து வருகிறது. எனவே இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அந்த முறையில் ஒரு தீர்வு காண அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இராமநாதபுரம் மா வட்டத்தின் பிரச்னைகள் மிகவும் பிரத்தியேகமான பிரச்னைகள். ஜமீந் தார்கள் ஒரு பக்கம். சிவகங்கை, சேத்தூர் ராஜா, போன்றவர்கள் மறு பக்கம். இப்படிப் பிரத்தியேக நிர்வாகத்தில் ஏற்பட்ட சில நிலைமைகள் காரணமாக பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், மக்களுக்கே கூட அங்கே ஒரு அரசாங்கம் இருக்கிறது. மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு தொடர்பிருக்கிறது என்ற அளவுக்கு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இன்னமும் கூட மதுரை யைத்தான் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராக வைத்திருக் கிறோம். இப்படிப் பல விசேஷ குண நலன்களைக் கொண்ட, விசேஷ அம்சங்களைக் கொண்ட மாவட்டம் அது. இப்படிப்பட்ட மாவட்டத் தில் கோடிக் கணக்கான ரூபாய் வரி இன்னும் வசூலாகவில்லை என்பது ஒரு பெரிய ஆச்சர்யமான விஷயமல்ல. அந்த மாவட்டத்தின் நில அமைப்புக்கூட அப்படித்தான் இருக்கிறது. செட்டி நாடு பகுதியிலுள்ள கானாடுகாத்தான் என்ற இடத்திற்குப் போயிருந்தேன். அங்கே 200 ஆண்டுகளுக்கு மேலாக பைசல் செய்யப்படாத பட்டாக்கள் பற்றிய வியாஜ்யம் இருந்து வருகிறது இன்றைக்கும். ஆனாலும் நம்முடைய புதிய அரசாங்கம் மக்களுக்கு ஒரு தெம்பினைக் கொடுத்து வருகிறது. அவர்கள் சொல்லுகிற பிரச்னைகளைக் கவனிக்கிறோம். ஆனால் கடன் கொடுத்ததை எல்லாம் விட்டுவிடுவது என்ற நிலைமையில்லாமல், கடனை திருப்பிக் கொடுக்கும்படியான நிலைமையையும் அந்த விவசாயிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றுதான் பாடுபடுகிறோம்.

DEPUTY CHAIRMAN : Questions 19 and 20 are postponed.

Questions are over.

[NOTE:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]